பக்கங்கள்:-22

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஆவணி 29 | சனிக்கிழமை | 13.09.2025 | அதிர்வு 043

## ரணில் தலைமையில் செப்டெம்பர் 20 இல் ஐ.தே.க. ஆண்டு விழா



ஐக்கிய தேசியக் கட்சியின் 79 ஆவது ஆண்டு நிறைவு விழாவை எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஸ்ரீஜயவர்த்தனபுர கோட்டையில் அமைந்துள்ள மோனார்க் 07

### தாய்நாட்டுக்கு எவரேனும் துரோகமிழைத்தால்

# நான் மீண்டும் எழுந்து நிற்பேன்

### தங்காலையில் இருந்து மஹிந்த சூளுரை



“சிங்கக் கொடியின் நிழலின் கீழ் உள்ள இந்த ஒற்றைத் தாய்நாட்டுக்கு யாரேனும் துரோகம் செய்தால், எந்தவொரு துன்புறுத்தல்களுக்கு மத்தியிலும் நான் எழுந்து நிற்பேன். கிருவப்பத்துவவில் உள்ள மஹிந்த ராஜபக்ஷவுக்கு அரசியல் அச்சுறுத்தல்களும், இடி முழக்கங்களும் நன்கு பழக்கப்பட்டவை. மஹிந்த ராஜபக்ஷ விஜேராமவில் இருந்தாலும், தங்காலையில் இருந்தாலும் மஹிந்த ராஜபக்ஷதான்.”

- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். 06

# அரசியல் பழிவாங்கல்களைத் தவிர வேறு எதையும் அரசு செய்யவில்லை



### இப்படிச் சாடுகின்றார் விமல்

“பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதாகக் கூறி ஆட்சியைப் பொறுப்பேற்றவர்கள், அரசியல் பழிவாங்கல்களைத் தவிர வேறு ஒன்றும் செய்யவில்லை. 30 ஆண்டு கால பயங்கரவாத யுத்தத்தை நிறைவுக்கு கொண்டு வந்து நாட்டில் அமைதியை நிலைநாட்டிய முப்படையினர் மற்றும் அரசியல் தலைவர்கள் அரசால் பழிவாங்கலுக்குள்ளாகின்றனர்.”

– இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார். 07




நாட்டை ஆளும் தேசிய மக்கள் சக்தியின் கூட்டின் கீழ் வடக்கு மாகாணத்தில் எந்த உள்ளூராட்சி சபையும் இல்லை. இதனால் வடக்கு உள்ளூராட்சி மன்றங்கள் ஆளும் தரப்பினால் திட்டமிடப்பட்டு புறக்கணிக்கப்படுவதாகச்தாக சுட்டிக் காட்டப்படுகின்றது.

உள்ளூராட்சி சபைகளின் மக்கள் பிரதிநிதிகளை வேண்டுமென்றே திட்டமிட்டு யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம் புறக்கணிப்பதாக உள்ளூராட்சி சபை தவிசாளர்களால் குற்றம் சாட்டப்படுகின்றது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அமைச்சுக்கள், திணைக்களங்கள் சார்பில் முன்னெடுக்கும் பணிகள் தொடர்பான கலந்துரையாடல்களாக இருக்கட்டும், மாவட்டச் செயலக கலந்துரையாடல் அல்லது ஜனாதிபதி செயலக கலந்துரையாடல் வரைக்கும் இந்த நிலையே காணப்படுவதாக இதுவரை ஏழு உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகத் தரப்பினர் சுட்டிக் காட்டுகின்றனர்.

காங்கேசன்துறை துறைமுக 06





# ஜனாதிபதி தலைமையில் ஆடை துறையினருடனான வரவு - செலவுத் திட்ட பூர்வாங்கக் கலந்துரையாடல்

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார ஸ்திரத்தன்மையின் அடிப்படையில்எதிர்காலபொருளாதாரவளர்ச்சி இலக்குகளை அடைவதே அரசாங்கத்தின் நோக்கம் என்றும் கைத்தொழிற் துறையினர் மற்றும் முதலீட்டாளர்களுக்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் முதலீடு செய்ய அரசாங்கம் தயக்கமின்றி செயற்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வலியுறுத்தினார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்ற ஆடைத் துறையில் ஈடுபட்டுள்ள தரப்பினர்களுடன் 2026 வரவு - செலவுத் திட்ட பூர்வாங்கக் கலந்துரையாடலில் பங்கேற்றபோது ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

தற்போதுள்ள கைத்தொழில்களுக்கு வசதிகளை வழங்குவதன் மூலம் முதல் சுற்றில் எதிர்பார்க்கும் முன்னேற்ற இலக்குகளை அடைய ஒரு அணுகுமுறையொன்றை எட்ட முடியும் என்று ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

ஒவ்வொரு ரூபாயையும் அதிக பலன் கிடைக்கும் முதலீடுகளுக்குப் பயன்படுத்துவது அரசாங்கத்தின் கொள்கை என்றும் அவர் தெரிவித்தார்.

கூட்டு ஆடை சங்கங்களின் மன்றம் சுதந்திர வர்த்தக வலய உற்பத்தியாளர்கள் சங்கம் உள்ளிட்ட ஆடைத் துறையில் உள்ள சிறு மற்றும் நடுத்தர வர்த்தகர்களின் பிரதிநிதிகளினால் ஒவ்வொரு துறை சார்ந்த வரவு செலவுத் திட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன.

உற்பத்திச் செலவு அதிகரிப்பு உள்ளிட்ட ஆடைத் துறையில் ஏற்பட்டுள்ள புதிய சவால்கள் மற்றும் வாய்ப்புகள் குறித்து ஆடைத்துறையினர் ஜனாதிபதியிடம் எடுத்துரைத்தனர்.

அனைத்துத் துறைகளுக்கும் வரிச் சலுகைகள் வழங்கப்பட வேண்டும் என்பதை அரசாங்கம் அங்கீகரிப்பதாகவும், வருமான நிலைகளுக்கு அமைவாக நாட்டின் பொருளாதாரத்தையும் பாதுகாத்து எதிர்காலத்தில் அத்தகைய சலுகைகளை வழங்க எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

“பரஸ்பர வரி” முறையின் கீழ் அமெரிக்காவினால் இலங்கை மீது விதிக்கப்பட்ட தீர்வை வரி விகிதத்தைக் குறைக்க அரசாங்கம் தலையிட்டதை கைத்தொழில் துறையினர் பாராட்டினர். இதற்காக ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்ததோடு எதிர்காலத்தில் இது தொடர்பாக மேலும் சலுகைகளைப் பெற தலையிடுமாறு கோரினர்.

ஆடைத் துறையில் பணியாற்றுகையில் எழுந்துள்ள பிரச்சினைகள் குறித்தும், உலக சந்தையில் இலங்கை தற்போது காணப்படும் புதிய வாய்ப்புகளை திறம்படப் பயன்படுத்துவதற்கும் சவால்களை எதிர்கொள்வதற்கும் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது.

இந்த விடயங்கள் குறித்து எதிர்வரும் வெளிநாட்டு உத்தியோகபூர்வ விஜயங்களின் போது கவனம் செலுத்துமாறும் கலந்துரையாடலில் பங்கேற்ற பிரதிநிதிகள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தனர்.

அரசாங்கம் ஏற்கனவே கவனம் செலுத்தியுள்ள . சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்களுக்கான அபிவிருத்தி வங்கியொன்றின் அவசியம் குறித்து கலந்துகொண்ட பிரதிநிதிகள் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

E-Invoice உள்ளிட்ட வரி அறவிடல் வசதிகளை மேலும் மேம்படுத்தவும் அவர்கள் பரிந்துரைத்தனர்.

தற்பொழுது உற்பத்திகளில் 55 வீத பெறுமதி சேர்க்கப்பட்ட தயாரிப்புகள் என்றும், எதிர்காலத்தில் இதனை மேலும் அதிகரிக்க எதிர்பார்ப்பதாக கைத்தொழிற் துறையினர் தெரிவித்ததோடு அரசாங்கம் இதற்குத் தேவையான வசதிகளை உருவாக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தனர்.

இந்தத் துறையில் நீண்டகால அனுபவத்தின் அடிப்படையில் நாட்டின் வளர்ச்சிக்காக முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளுக்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி, அந்த முன்மொழிவுகள் அனைத்தையும் ஆராய்ந்து , அரசாங்கம் எடுக்க வேண்டிய உடனடி நடவடிக்கைகள் மற்றும் இது தொடர்பாக நடத்தப்படும் எதிர்கால கலந்துரையாடல்களுக்கான திட்டத்தைத் தயாரிக்குமாறு நிதி அமைச்சின் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

இந்த கலந்துரையாடலில், ஜனாதிபதியின் சிரேஸ்ட பொருளாதார ஆலோசகர் துமிந்த ஹுலங்கமுவ, ஜனாதிபதியின் சிரேஸ்ட மேலதிகச் செயலாளர்களான ரஸல் அபோன்சு, கபில ஜனக பண்டார, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை தலைவர் மங்கள விஜேசிங்க மற்றும் ஆடைத் துறையில் ஈடுபட்டுள்ள தரப்பினர்கள் கலந்து கொண்டனர்.



# பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களுடன் கட்டுநாயக்கவில் பெண் உட்பட இருவர் சிக்கினர்!

சட்டவிரோதமாக இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட நவீன கையடக்கத் தொலைபேசிகள், டெப் கணினிகள், அழகு சாதனப் பொருட்கள் மற்றும் சிகரெட்டுக்களையும் கஞ்சாவையும் பொதி செய்ய பயன்படுத்தப்படும் பெட்டிகளுடன் பெண் உட்பட இருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலையத்தின் சுங்க அதிகாரிகளால் நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடைய ஆணும், 45 வயதுடைய பெண்ணும் ஆவர்.

கைது செய்யப்பட்ட இருவரும் வர்த்தகர்கள் ஆவர்.

சந்தேகநபர்கள் இருவரும் டுபாயில் இருந்து நேற்று அதிகாலை 5.30 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

பின்னர் சந்தேகநபர்கள் இருவரும் கட்டுநாயக்க விமான நிலையத்தை விட்டு வெளியேற முயன்ற போது விமான நிலையத்தின் சுங்க அதிகாரிகளால் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதன்போது சந்தேகநபர்கள் இருவரும் கொண்டு வந்த 5 பயணப் பொதிகளில் இருந்து 132 நவீன கையடக்கத் தொலைபேசிகள், 14 டெப் கணினிகள், அழகு சாதனப்



பொருட்கள் மற்றும் சிகரெட்டுக்களையும் கஞ்சாவையும் பொதி செய்ய பயன்படுத்தப்படும் 1,700 பெட்டிகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட வெளிநாட்டு சிகரெட்டுக்களின் மொத்தப் பெறுமதி 50 இலட்சம் ரூபா என விமான நிலையப் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை விமான நிலையத்தின் சுங்க அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

# அத்துரலிய ரத்தன தேரர் பிணையில் நேற்று விடுவிப்பு!



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தன தேரரைப் பிணையில் விடுவிக்குமாறு நுகேகொடை நீதிவான் நீதிமன்றம் நேற்று வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அத்துரலிய ரத்தன தேரர் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, அத்துரலிய ரத்தன தேரரை 5 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் மற்றும் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான ரொக்கப் பிணையில் விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2020 ஆம் ஆண்டில் வேதனிகம விமலதிஸ்ஸ தேரரைக் கடத்திச் சென்று மிரட்டிய சம்பவம் தொடர்பில் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளின் அடிப்படையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தன தேரரைக் கைது செய்யுமாறு நீதிமன்றத்தால் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

ஆனால், அத்துரலிய ரத்தன தேரர் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருந்ததால் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் அவரைத் தேடி வந்தனர்.

இந்நிலையில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தன தேரர் நுகேகொடை நீதிவான் நீதிமன்றத்தில் கடந்த மாதம் 29 ஆம் திகதி ஆஜராகியதைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# காணாமல்போன குடும்பஸ்தர் ஆற்றிலிருந்து சடலமாக மீட்பு!

காணாமல்போன குடும்பஸ்தர் ஒருவர் ஆற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காலி, ஹினிதும பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மல்கல்ல பிரதேசத்தில் உள்ள ஆற்றில் இருந்தே இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

தலங்கல்ல பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான 47 வயதுடைய நபரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 10 ஆம் திகதி தனது காணிக்குச் செல்வதாகக் கூறி வீட்டில் இருந்து வெளியே சென்றுள்ள நிலையில் மீண்டும் வீடு திரும்பாமல் இருந்துள்ளார்.

இதனால் அவரது குடும்பத்தினர் இது தொடர்பில் ஹினிதும பொலிஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் காலை



முறைப்பாடு அளித்துள்ளனர்.

பொலிஸாரின் விசாரணையில் காணாமல்போனவர் மல்கல்ல பிரதேசத்தில் உள்ள ஆற்றில் இருந்து நேற்றுமுன்தினம் மாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹினிதும பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# விஜேராம இல்லத்தின் சாவிக் கொத்தை 7 நாள்களுக்குள் கையளிப்பாராம் மஹிந்த



"சட்டத்துக்கு மதிப்பளித்து கொழும்பு – விஜேராம மாவத்தையில் உள்ள அரச இல்லத்தில் இருந்து மஹிந்த ராஜபக்ஷ வெளியேறினார். இன்னும் ஒரு வார காலத்துக்குள் வீடு அதிகாரபூர்வமாக மீளக் கையளிக்கப்படும்."

– இவ்வாறு மஹிந்த ராஜபக்ஷவின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி மனோஜ் கமகே தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"முப்பது வருட காலப் போரை முடிவுக்குக் கொண்டு வந்து, நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்திய தலைவருக்கு அரசு இப்படி நன்றிக் கடன் செலுத்துகின்றது என்பது மக்களுக்கு தற்போது புரிந்திருக்கும்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிருடன் இருந்திருந்தால் இந்த நிலைமையைப் பார்த்து நிச்சயம் மகிழ்ச்சியடைந்திருப்பார்.

எனினும், காட்டில் இருந்தாலும், நகரில் இருந்தாலும் சிங்கம் சிங்கம்தான். மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புக்கு ஏதேனும் அச்சுறுத்தல் ஏற்பட்டால் அதற்குரிய பொறுப்பை அரசு ஏற்க வேண்டும்." – என்றார்.

அதேவேளை, மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் அரச மாளிகையில் இருந்து வெளியேறினாலும், அரசுக்குரிய சொத்துக்களைக் கையளிப்பதற்கு ஒரு வாரம் அவகாசம் கோரப்பட்டுள்ளது.



# கோபா குழுவின் புதிய தலைவராக எதிரணி எம்.பி. கபீர் ஹாசிம் தெரிவு

இலங்கையின் பத்தாவது நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத் தொடருக்கான அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் (கோபா) புதிய தலைவராக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் தெரிவு செய்யப்பட்டார்.

அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் தலைவராகப் பணியாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் அரவிந்த செனரத் 2025.08.06ஆம் திகதியன்று அந்தப் பதவியை இராஜிநாமாச் செய்ததையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்பும் நோக்கில் நேற்று வெள்ளிக்கிழமை கூடிய அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே இந்தத் தெரிவு இடம்பெற்றது.

தலைவர் பதவிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிமின் பெயரை நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சி.அலவத்துவல முன்மொழிந்ததுடன் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன வழிமொழிந்தார்.

இதனைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த புதிய தலைவர் கபீர் ஹாசிம், அரசியல் கருத்து வேறுபாடுகள் இன்றி நடுநிலையாகச் செயற்பட்டு சகல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் தனது பதவியை முன்னெடுத்துச் செல்ல எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்டார்.

அத்துடன், முன்னாள் தலைவர் நாடாளுமன்றஉறுப்பினர் அரவிந்த செனரத் பணிகளைப் பாராட்டியதுடன், அவர் மேற்கொண்ட பணியைத் தொடர்ச்சியாக எதிர்காலத்தில் இன்னும் சிறப்பாகச் செய்வதற்கு எதிர்பார்ப்பதாகவும் புதிய தலைவர் குறிப்பிட்டார்.



புதிய திட்டங்களை வகுப்பதன் மூலம் கோபா குழுவின் பங்கை மேலும் நெறிப்படுத்தவும் பராமரிக்கவும் தேவையான நடவடிக்கைகளை எடுக்கத் தயாராக இருப்பதாகவும் புதிய தலைவர் மேலும் தெரிவித்தார்.

# லொறி மீது மோதிய மோ. சைக்கிள்! ஆண் ஒருவர் பரிதாப உயிரிழப்பு!!



வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறி மீது மோட்டார் சைக்கிள் மோதி இடம்பெற்ற விபத்தில் ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து கண்டி - யாழ்ப்பாணம் வீதியில் 48ஆவது கிலோமீற்றர் மைல்கல் பகுதியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

விபத்து தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

கண்டியில் இருந்து தம்புள்ளை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறி மீது மோதியுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிளின் செலுத்துநர் நாலந்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

கலேவெல பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நாவுல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அபிவிருத்தி தொடர்பில் இம் மாதம் 3 ஆம் திகதி கலந்துரையாடப்பட்டபோது வலிகாமம் வடக்குப் பிரதேச சபையின் தவிசாளர் அழைக்கப்படவில்லை. வேலணை தொடர்பில் இரு கூட்டங்கள் இடம்பெற்ற போதும் வேண்டுமென்றே மக்களால் தெரிவுசெய்யப்பட்ட தலைவர்களை ஒதுக்கி விட்டு, சபையின் செயலாளர்களே அழைக்கப்பட்டனர்.

ஆனால் சபையின் கீழுள்ள காணியைப் பிடுங்குவதற்கான நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு மட்டும் – அதற்கான அனுமதியை தவிசாளரிடமிருந்தே பெற வேண்டும் என்பதற்காக – அது தொடர்பான கூட்டத்திற்கு தவிசாளர் அழைக்கப்பட்டார். ஆனால் முற்கூட்டியே விடயம் விளங்கியோ என்னவோ அவர் கூட்டத்துக்குச் செல்லவில்லை. டிமிக்கி கொடுத்து விட்டார்.

யாழ். மாநகர சபையின் ஆளுகையில் உள்ள பொதுநூலகத்தில் இடம்பெற்ற நிகழ்விற்கு ஜனாதிபதி செயலகத்தின் உத்தியோகத்தர்கள் சகிதம் இடம்பெற்ற கூட்டத்திறகும் மாவட்டச் செயலாளரே அழைப்பு விடுத்த போதும் மாநகர முதல்வருக்கு மட்டும் அழைப்பு விடுக்கப்படவில்லை.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக மீள்குடியேற்றப் பகுதியில் உள்ள வீதிகள் புனரமைப்பு பணிகள் தொடர்பில் வலி.கிழக்கு மற்றும் வலி வடக்கு பிரதேச சபைகளின் செயலாளர்கள் அழைக்கப்பட்டனரே அன்றி தவிசாளர்கள் அழைக்கப்படவில்லை.

இறுதியாக சில தினங்களுக்கு முன்னர் பருத்தித்துறை துறைமுக அபிவிருத்தி தொடர்பில் மாவட்டச் செயலகத்தில் கலந்துரையாடப்பட்டது. இருப்பினும் பருத்தித்துறை நகர பிதா அழைக்கப்படவில்லை.

இதுதொடர்பில் மேலும் பல முறைப்பாடுகள் உண்டு. பின்னர் ஒரு நாளைக்கு ஆறுதலாகப் பார்ப்போம்.

## நான் மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

“மஹிந்த ராஜபக்ஷவாகிய நான் சட்டத்துக்கும் என் மக்களுக்கும் முன்னால் மட்டுமே தலைவணங்குவேன்” – என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கொழும்பு – விஜேராம மாவத்தையில் அமைந்துள்ள அரச இல்லத்தில் இருந்து வெளியேறிய முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அம்பாந்தோட்டை – தங்காலையில் அமைந்துள்ள தனது சொந்த வீட்டில் குடியேறியுள்ளார். அவர் நேற்று வெள்ளிக்கிழமை தனது உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தில் செய்துள்ள பதிவிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்தப் பதிவில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

“கடந்த புதன்கிழமை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட ஜனாதிபதிகளின் உரிமைகளை நீக்கும் சட்டமூலம் நடைமுறைக்கு வந்த புதிய சட்ட நிலையை மதித்து, எனக்குச் சட்டபூர்வமாக வழங்கப்பட்ட விஜேராம உத்தியோகபூர்வ இல்லத்தை விட்டு வியாழன் மாலை நான் வெளியேறினேன். இதற்கு முன்னர், விஜேராம உத்தியோகபூர்வ இல்லத்தை விட்டு வெளியேறுமாறு சிலர் ஊடகங்கள் முன் பல்வேறு உத்தரவுகளைப் பிறப்பித்ததை நான் கண்டேன்.

மக்களுக்கு எதையும் செய்ய இயலாமல் மிகக் குறுகிய காலத்தில் மக்களால் நாளுக்கு நாள் வெறுக்கப்படும் ஒரு குழு, தங்கள் இயலாமையை மறைக்க ஊடகங்கள் முன் செய்த அந்த அறிக்கைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டிய அவசியம் எனக்கு இருக்கவில்லை. ஆனால், அவர்கள் புதிய சட்டங்களை இயற்றிய பிறகு, 24 மணி நேரத்துக்குள் நான் விஜேராம இல்லத்துக்கு விடை கொடுத்தேன். ஏனென்றால் நாம் சட்டத்தை மதிக்க வேண்டும். மஹிந்த ராஜபக்ஷவாகிய நான் சட்டத்துக்கும் என் மக்களுக்கும் முன்னால் மட்டுமே தலைவணங்குவேன்.

தனிப்பட்ட பழிவாங்கலை நோக்கமாகக் கொண்ட, ஒழுக்கம் மற்றும் தொழில்முறை இல்லாத அரசியல் பயங்கரவாதத்தை நாம் அனைவரும் எதிர்கொள்ள நேர்ந்துள்ளது. மேலும், கொடூரமான பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வந்ததன் காரணமாக, அதன் விளைவாக எழுந்த பலசம்பவங்களின் இலக்காக நான் மாறிவிட்டேன். ஆனால், பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டு வந்ததற்காக நான் ஒருபோதும் வருந்தமாட்டேன். இந்தத் தாய்நாட்டில் சுதந்திரமாகச் சுவாசிக்கும் உரிமைக்காக நான் போர் புரிந்தேன்.

சுவாசம் என்பது நம் அனைவருக்கும் பொதுவானது. இதில் இன, மத பேதங்கள் இல்லை. நம் சுவாசத்துக்காக தங்கள் சுவாசத்தை இழந்தவர்கள் இராணுவ வீரர்கள். அவர்கள் வென்ற ஒரு பெருமைமிக்க தேசத்தின் சுதந்திரத்தை அடையாளப்படுத்தவும், அதற்கு நன்றி தெரிவிக்கவும் நாம் அனைவரும் சேர்ந்து அநுராதபுரம் புனித நகரத்தில் சந்த ஹிரு சேயவை (சந்திரன் மற்றும் சூரியன் தாது கோபுரம்) உருவாக்கினோம். சந்திரன், சூரியன் இருக்கும் வரை நமது தாய்நாடு ஒரே நாடாக, ஒரே கொடியின் கீழ் இருக்கும் என்பதை அது குறிக்கின்றது.

எனது மூத்த மகன் நாமல் கூறியது போலவே, எல்லாம் தொடங்கிய எனது கிராமத்துக்கு நான் திரும்ப வந்துள்ளேன். நாம்கட்டிய தெற்கு அதிவேக நெடுஞ்சாலை வழியாகவே நான் வந்தேன். இப்போது கிராமத்தில் புளிக்குழம்பில் உள்ள மீனை ருசித்து மகிழ என்னால் முடியும். கொழும்புக்கு எடுத்துச் செல்ல வேண்டிய அவசியமும் இல்லை. எது எப்படி இருந்தாலும், எல்லாம் இந்த மண்ணிலிருந்துதான் தொடங்கியது. 1970 பொதுத் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ என்ற இளைஞன் போட்டியிட்டான்.

அதற்கான வாய்ப்பை சிறிமாவோ பண்டாரநாயக்க வழங்கினார். ஓர் இளம் அமைச்சராக நான் பயணிக்க வேண்டிய பாதையை அவர் எனக்குக் காட்டினார். அவர் எங்களுக்கு ஒரு தலைவியாகவும், தாயாகவும் இருந்தார் என்றால் அது சரியானது. அரசியலில் சரியான வழிகாட்டுதல் மிகவும் முக்கியமானது. நாட்டின் ஒடுக்கப்பட்ட மக்களை சோசலிசத்தை நோக்கி வழிநடத்திய பண்டாரநாயக்கவுக்குப் பின்னால், ரூஹுணுவின் மக்கள் பிரதிநிதியாக இருந்த எனது அன்புக்குரிய தந்தை எப்போதும் காணப்பட்டார். எனது தந்தை ரூஹுணுவின் பெலியத்த மக்களின் எதிர்பார்ப்புகளைப் பிரதிநிதித்துவப்படுத்தினார்.

நாடாளுமன்றத்தின் இளைய உறுப்பினராக, 1970 ஆம் ஆண்டு மக்கள் அரசின் முதல் சிம்மாசன உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை நான் கொண்டு வந்தேன்.

அங்கு பெலியத்த மக்களின் எதிர்பார்ப்புகளைப் பற்றி நான் பேசியது எனக்கு நினைவிருக்கின்றது. இருண்ட காலங்களில் நிலவிய அரசியல் அடக்குமுறை மற்றும் பழிவாங்கலை எதிர்த்து, காணாமல்போனவர்களுக்காக ஜெனிவா மனித உரிமைகள் பேரவைக்குச் சென்றதும் இந்த மஹிந்த ராஜபக்ஷதான். காணாமல்போனவர்கள், மனித உரிமைகள் மீறல்களுக்காக சட்ட உதவி வழங்கப்பட்ட இடத்தின் முகவரி “வழக்கறிஞர் மஹிந்த ராஜபக்ஷ, தலைவர் – மனித உரிமைகள் மற்றும் சட்ட உதவி மையம், கார்ல்டன், தங்கல்லை” என்பதை எனது சகோதரர்களுக்கு மீண்டும் நினைவூட்டுகின்றேன்.

பாத யாத்திரைகள், பொதுமக்கள் கண்டனப் போராட்டம், மனிதச் சங்கிலி போன்ற அரச எதிர்ப்புப் போராட்டங்கள் மக்களின் நலனுக்காக ஜனநாயக வழிமுறைகள் மூலம் மேற்கொள்ளப்படும் உண்மையான மக்கள் போராட்டங்களுக்குஎடுத்துக்காட்டுகள்.தங்கள்அரசியல் அழுத்தங்களையும், பதற்றங்களையும் தவிர்ப்பதற்காக யாரும் ஜனநாயகத்தில் இருந்து விலகிச் செல்ல முடியாது. தவறான தகவல்களைப் பரப்புவதன் மூலம் பிரதான எதிர்க்கட்சித் தலைவர்களை அடக்க முயற்சிப்பது வருத்தத்துக்குரியது.

மக்கள் எங்கள் மீது வைத்திருந்த எதிர்பார்ப்புகள் அதிகம். அந்த எதிர்பார்ப்புகளின் தீவிரம் காரணமாகவே கடந்த காலத்தில் சில சம்பவங்களை எதிர்கொள்ள நேர்ந்தது. மஹிந்த ராஜபக்ஷ தன் மனச்சாட்சிக்கு இணங்க நாட்டுக்காக முடிவுகளை எடுத்தார். மக்களின் அன்பையும் பாசத்தையும் விட எனக்கு மதிப்புமிக்கது வேறு எதுவும் இல்லை. கடந்த காலத்தில் பெற்ற அதே மக்கள் அன்பை இன்றும் அதே போல் பெறுவது எனக்குக் கிடைத்த பாக்கியம். அந்தப் பாக்கியத்தை யாரிடமும் இழக்க முடியாது.

மதத் தலைவர்களிடம் இருந்து தினமும் நான் பெறும் ஆசீர்வாதம், பௌதீக வரப்பிரசாதங்களை விட மேலானது. எனது அன்பு மனைவி ஷிரந்தி, அரசியலில் ஈடுபடுவதற்குத் தேவையான மனச் சுதந்திரத்தை அளித்து எனக்கு எப்போதும் பலமாக இருந்தார். அப்போதும், இப்போதும் என் அருகில் இருந்த மற்றும் இருக்கும் எனது பிரதான பாதுகாப்பு அதிகாரி உட்பட எனது பாதுகாப்பு அதிகாரிகளிடம் இருந்து கிடைக்கும் பாதுகாப்பு, பணியைத் தாண்டிய ஒரு பாசமான பிணைப்பாகும். மஹிந்த ராஜபக்ஷ விஜேராமவில் இருந்தாலும், தங்காலையில் இருந்தாலும் மஹிந்த ராஜபக்ஷ தான்.

மஹிந்த ராஜபக்ஷவுக்கு இப்போது முட்டுக் கொடுக்க வேண்டிய அவசியம் உள்ளது என ஓர் அறிக்கை வெளியிடப்பட்டதாக எனக்குத் தெரியவந்தது. தனிப்பட்ட முறையில் என்னை இலக்கு வைப்பது குறித்து நான் பதிலளிக்கவில்லை. ஆனால், நான் வாழும் வரை, நாம் அனைவரும் வாழும் அல்லது ஒரு நாள் அடக்கம் செய்யப்படும் சிங்கக் கொடியின் நிழலின் கீழ் உள்ள இந்த ஒற்றைத் தாய்நாட்டுக்கு யாரேனும் துரோகம் செய்தால், எந்தவொரு துன்புறுத்தல்களுக்கு மத்தியிலும் நான் எழுந்து நிற்பேன் என்று நான் அறிவிக்கின்றேன். அன்று தேவைப்பட்டால் எனக்குத் தோள் கொடுக்க இந்த நாட்டில் மகா சங்கத்தினரை உள்ளடக்கிய அன்பு மக்கள் இருக்கின்றார்கள் என்பதை நான் நன்கு அறிவேன். கிருவப்பத்துவவில் உள்ள மஹிந்த ராஜபக்ஷவுக்கு அரசியல் அச்சுறுத்தல்களும், இடி முழக்கங்களும் நன்கு பழக்கப்பட்டவை.” – என்றுள்ளது.

# வீட்டில் வைத்து தாய், மகன் கொடூரமாக வெட்டிக்கொலை

கரந்தெனிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டவெல பகுதியில் ஒரு தாயும், அவரது மகனும் கொடூரமாக வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் தகவலின்படி, இந்தச் சம்பவம் அவர்கள் வீட்டினுள் நடைபெற்றுள்ளது.

இதில் உயிரிழந்தவர்கள், 75 வயதுடைய பெண் மற்றும் 25 வயதுடைய இளைஞர் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும் விசாரணைகளில், உயிரிழந்த இளைஞர் பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் ஓட்டோ ஓட்டுநராகப் பணியாற்றி வந்தவர் என்பதும் தெரியவந்துள்ளது.

எனினும், இந்த இரட்டைக் கொலைக்கான காரணம் அல்லது குற்றத்தைப் புரிந்தவர்கள் குறித்து இதுவரை எவ்வித தகவலும் வெளியாகவில்லை.

சம்பவம் குறித்து கரந்தெனிய பொலிஸார் விரிவான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



## அரசியல் பழி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று வெள்ளிக்கிழமை அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடங்களுக்குச் சென்று மகாநாயக்க தேரர்களைச் சந்தித்து இது தொடர்பில் தெளிவுபடுத்திய பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

எதிர்க்கட்சிகளின் முன்னாள் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடங்களுக்குச் சென்றிருந்தனர்.

இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட விமல் வீரவன்ச,

“முன்னாள் கடற்படைத் தளபதி நிஷாந்த உலுகேதென்ன அடிப்படையற்ற காரணிகளைக் கூறி தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப் பட்டுள்ளார்.

நாட்டில் அமைதியை நிலைநிறுத்திய படைத்தளபதிகள் இவ்வாறு அரசியல் பழி வாங்கல்களுக்கு உட்படுத்தப்படுகின்றமை தொடர்பில் மகா சங்கத்தினருக்குத் தெளிவுபடுத்துவதற்காகவே நாம் இங்கு வருகை தந்தோம்.

அது தொடர்பில் பேசுபவர்களை ஐ.சி.சி.பி.ஆர். சட்டத்தின் கீழ் கைது செய்வதற்கும் அரசு முயற்சிக்கின்றமை தொடர்பிலும் மகா சங்கத்தினருக்குத் தெளிவு படுத்தியுள்ளோம்.

அரசு அபிவிருத்திகளையோ சமூக மேம்பாட்டையோ செய்யவில்லை. சத வீதமாகக் காணப்பட்ட பொருளாதார வளர்ச்சி வேகம் 3 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. கடன் சுமை முன்னரை விட தற்போது அதிகரித்துள்ளது.

பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதாகக் கூறி ஆட்சியைப் பொறுப்பேற்றவர்கள், அரசியல் பழிவாங்கல்களைத் தவிர வேறு ஒன்றும் செய்யவில்லை. எவ்வாறிருப்பினும் இவற்றுக்கு எதிரான நடவடிக்கைகளை நாம் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றோம்.

நிஷாந்த உலுகேதென்ன தொடர்பில் ஊடகவியலாளர் மாநாடொன்றில் முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில குறிப்பிட்டிருந்தார். அதில் அவர் “புலி” என்ற வார்த்தையை உபயோகித்தமைக்காகவே ஐ.சி.சி.பி.ஆர். சட்டத்தின் கீழ் அவரைக் கைது செய்ய முயற்சிக்கின்றனர்.

புலி என்பது நாட்டில் தடை செய்யப்பட்ட ஒரு பயங்கரவாத அமைப்பாகும். மாறாக அது தமிழ்ச் சமூகத்தையோ அல்லது முஸ்லிம் சமூகத்தையோ விமர்சிக்கும் சொற்பிரயோகம் அல்ல.

இவ்வாறு அடிப்படையற்ற காரணிகளைக் கொண்டு முன்னாள் அரசியல்வாதிகளைக் கைது செய்ய முயற்சிப்பதை அரசியல் பழிவாங்கல் அன்றி எவ்வாறு கருதுவது?

இதற்கு முன்னர் எந்தவொரு அரசும் இவ்வாறு அரசியல் பழிவாங்கல்களில் ஈடுபடவில்லை. பகிரங்கமாகக் கூற முடியாத பல பழிவாங்கல்களில் இந்த அரசு ஈடுபட்டுள்ளது.

நாட்டில் ஜனாதிபதி என்பவர் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் தீர்மானம் எடுப்பவராவார். எனவே, அவர் ஓய்வுபெற்ற பின்னர் அவரது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டியதும், ஏனைய சிறப்புரிமைகள் வழங்கப்பட வேண்டியதும் அத்தியாவசியமானதாகும். இலங்கையில் மாத்திரமின்றி எந்தவொரு நாட்டிலும் இதுவே யதார்த்தமாகும்.

தற்போது முன்னாள் ஜனாதிபதிகள் உத்தியோகபூர்வ இல்லங்களில் இருந்து வெளியேறியுள்ளனர். அவ்வாறெனில் இனி அரசு மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைத்துக் காட்ட வேண்டும். இதன்மூலம் எவ்வாறு பணத்தை மீதப்படுத்துகின்றனர் என்பதையும் நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும்.” – என்றார். (மற்றொரு செய்தி 22ஆம் பக்கத்தில்...)

# வாக்காளர் பட்டியலை திருத்தம் இறுதிக் கட்டத்தை அடைந்தது

## தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு




வாக்காளர் பட்டியலை திருத்தும் பணி தற்போது இறுதிக் கட்டத்தில் இருப்பதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மாவட்ட அளவில் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகள் குறித்து மாவட்டங்களுக்குப் பொறுப்பான உதவித் தேர்தல் ஆணையாளர்கள் தற்போது விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என அவர் தெரிவித்தார்.

இந்த நடவடிக்கைகள் நிறைவடைந்தவுடன், 2025 ஆம் ஆண்டிற்கான பிரதான வாக்காளர் பட்டியலை சான்றளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ரணில் தலைமையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இம்பீரியல் ஹோட்டலில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கொழும்பில் அமைந்துள்ள அவரது அரசியல் காரியாலயத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே இவ்வாறு தீர்மானிக்கப் பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் 79ஆவது ஆண்டு நிறைவு விழா ஏற்கனவே கடந்த 6ஆம் திகதி நடத்துவதற்குத் தீர்மானித்திருந்த நிலையில், கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உடல் ஆரோக்கியத்தைக் கருத்தில் கொண்டு கட்சியின் முகாமைத்துவ குழு, விழாவை ஒத்திவைப்பதற்குத் தீர்மானித்திருந்தது.

அதன் பிரகாரம் ஒத்திவைக்கப்பட்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் 79 ஆவது ஆண்டு நிறைவு விழாவை எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# விசேட சுற்றிவளைப்பில் 5 ஆயிரத்து 88 பேர் கைது!

இலங்கையில் ஒரே நாளில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 5 ஆயிரத்து 88 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ் அதிகாரிகள், இராணுவத்தினர், பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மற்றும் கடற்படையினர் ஆகியோர் இணைந்து நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் ஆதாரங்களுடன் 666 பேரும், சந்தேகத்தின் பேரில் 16 பேரும், பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 218 பேரும், திறந்த பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 156 பேரும், மதுபோதையில் வாகனங்களை செலுத்தியமை தொடர்பில் 49 சாரதிகளும், கவனக்குறைவாக வாகனங்களைச் செலுத்தியமை தொடர்பில் 22 சாரதிகளும், ஏனைய போக்குவரத்து விதி




முறைகளை மீறியமை தொடர்பில் 3 ஆயிரத்து 961 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

# ஆற்றிலிருந்து அடையாளம் தெரியாத ஆண் ஒருவரின் சடலம் நேற்று மீட்பு!



ஆற்றில் மிதந்த நிலையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பெந்தர ஆற்றில் மிதந்த நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை இந்தச் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று அளுத்கம பொலிஸார் தெரிவித்தனர்.

45 வயது மதிக்கத்தக்க ஆணே சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

சடலமாகமீட்கப்பட்டவர்தொடர்பில்இது வரை எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அளுத்கம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சஷீந்திர ராஜபக்ஷவின் பிணை கோரிக்கை மறுப்பு

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக் ஷவின் சட்டத்தரணி நீதிமன்றத்தில் ஆஜராகி, சஷீந்திர ராஜபக் ஷ தூக்கத்தின் போது கடுமையான மூச்சுத்திணறல் பிரச்சினை அனுபவிப்பதாகவும், ஒரு மணி நேரத்திற்குள் சுமார் 35 முறை சுவாசக் கடினம் ஏற்படுவதாகவும் தெரிவித்தார்.

இதனால் அவரின் உடல்நிலை நாளுக்கு நாள் மோசமடைந்து வருவதாகவும் வலியுறுத்தினார்.

இந்த சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு, அவரை சிகிச்சை பெறும் வகையில் பிணையில் விடுதலை செய்ய நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

எனினும், இந்த கோரிக்கையை பரிசீலித்த கொழும்பு நீதிவான் நீதிமன்றம், பிணை வழங்கப்பட முடியாது என்று தீர்மானித்தது.

இதன்படி, சஷீந்திர ராஜபக் ஷவை வரும் 19 ஆம் திகதி



வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த தீர்ப்பு வெளியானதையடுத்து, நீதிமன்ற வளாகத்தில் சஷீந்திர ராஜபக் ஷ ஆதரவாளர்கள் மற்றும் சட்டத்தரணிகள் இடையே பெரும் பரபரப்பு நிலவியமை குறிப்பிடத்தக்கது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## தவறும் இலக்கு

மூன்றரை ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்ட போது, அதன் அந்நிய செலாவணி கையிருப்பு கரைந்து, நாடு மீள முடியாத சிக்கலில் மூழ்கியது.

அந்த நெருக்கடியில் இருந்து நாடு மீண்டெழுந்த போது, அதற்கு அதிக அந்நிய செலாவணியைத் தேடித்தரும் வாய்ப்பை அமைத்தது சுற்றுலாத் துறைதான்.

வெளிநாட்டிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் இங்கு செலவழிக்கும் தங்களுடைய நாட்டின் நாணயங்கள் மூலம் இலங்கை பெருமளவு அந்நிய செலாவணியை ஈட்டி, தன்னை ஓரளவுக்கு நிலை நிறுத்திக் கொள்ளக் கூடியதாக இருந்தது.

அந்த வகையில் இந்த ஆண்டில் 30 லட்சம் உல்லாசப் பயணிகளை நாட்டுக்குள் ஈர்க்க இலங்கை திட்டமிட்டு செயல்பட்டது. ஆயினும் அந்த இலக்கு இந்த ஆண்டு சாத்தியப்படாது என்று இப்போது கூறப்படுகின்றது.

நாட்டில் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதில் உள்ள தாமதங்கள் மற்றும் செயல்பாட்டுத் தடைகள் காரணமாக, உல்லாசப் பயணிகளின் வருகை 25 லட்சத்தைத் தாண்டும், முப்பது லட்சத்தை எட்டாது என சுற்றுலா பிரதி அமைச்சர் பேராசிரியர் ருவான் ரணசிங்க ஒப்புக்கொள்கிறார்.

உத்தியோகபூர்வ இலக்கை அடைய, மீதமுள்ள 16 வாரங்களில் இலங்கை கிட்டத்தட்ட 14 லட்சம் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க வேண்டும். இதற்கு வாராந்திர வருகை 87,000க்கும் அதிகமானதாக இருக்க வேண்டும். இது தற்போதைய சராசரி வருகை விகிதத்தை விட இரண்டு மடங்கு அதிகமாகும். அதனால் இலக்கை எட்டுவது சாத்தியமற்றது எனக் கூறப்படுகின்றது.

பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் விமான சேவைகளை அதிகரிப்பதில் உள்ள நெருக்கடிகள், மத்தள விமான நிலையத்தில் மாற்று ஏற்பாடுகளைச் செய்வதில் உள்ள தாமதங்கள் போன்றவையும் இலக்கை அடைய முடியாமல் போனமைக்கான காரணங்கள் என்று கூறப்படுகின்றது.

மொத்தம் 47 நாடுகளின் பயணிகளுக்கு இலவச விசா வழங்கும் திட்டம் மூலம் அதிகப்படியான சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கத் திட்டமிடப்பட்ட போதிலும் இன்னும் அதற்கு சட்டமா அதிபரின் அனுமதி கிடைக்கவில்லை. அது நிலுவையில் உள்ளது. அக்டோபர் தொடக்கத்தில்தான் இது கிட்டும் என்று கூறப்படுகிறது.

அக்டோபருக்கு பின்னர் இந்த அனுமதி கிடைத்து, இந்தத் திட்டத்தின் கீழ் அந்த 47 நாடுகளின் பயணிகளையும் சுற்றுலாவுக்குத் தூண்டி நாட்டுக்கு வரவழைப்பதற்கு இடையில் இந்த ஆண்டு முடிந்துவிடும். இந்த ஆண்டுக்குரிய இலக்கை இந்தத் திட்டத்தின் கீழ் அடைய முடியாமல் போகும் என்று சுட்டிக் காட்டப்படுகிறது.

நீடித்த தங்குதல் மற்றும் நல்வாழ்வு சுற்றுலாவை அதிகரிக்க வயதான ஐரோப்பியர்களுக்கான நீண்டகால விசாக்களை அரசாங்கம் பரிசீலித்து வருவதாகவும் தெரிவிக்கிறது.

எது,எப்படியாயினும் தன்னுடைய அந்நிய செலாவணி கையிருப்பை உயர்த்தி, நாட்டின் பொருளாதாரத்தை சற்றேனும் நிமிர்த்துவதற்கு உல்லாசப் பயணத் துறையில் நாடு முழுக் கவனம் செலுத்துவது முக்கியமாகும்.

# நேபாளத்தில் சிக்கியுள்ள தமிழர்கள் தங்கள் விவரத்தை அறிவிக்க வசதி!



நேபாளத்தில் சிக்கியுள்ள தமிழர்கள் தங்கள் விவரங்களை, டில்லி தமிழ்நாடு இல்லத்தில் தொடங்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறையில் தெரிவிக்கலாம் என தமிழக அரசு கூறியுள்ளது.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில்,

நேபாள நாட்டில் சிக்கியுள்ள தமிழர்களின் நிலை குறித்து அறியவும், அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கவும் உரிய நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டார்.

அதன்படி, நேபாளத்தில் சிக்கியுள்ள தமிழர்கள் நிலை குறித்து அறியவும், உதவிகளை வழங்கி மீட்கவும், டில்லியில் உள்ள , தமிழ்நாடு இல்லத்தில் 24 மணிநேரமும் இயங்கும் கட்டுப்பாட்டு அறை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்திய வெளியுறவுத்துறை மற்றும் நேபாள நாட்டிலுள்ள இந்திய தூதரக அதிகாரிகளுடனும் தொடர்பு கொண்டு, தமிழகத்தைச் சேர்ந்த பயணிகளை மீட்டுவர புதுதில்லி, தமிழ்நாடு இல்ல அதிகாரிகள் தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர். நேபாளத்துக்கு சுற்றுப்பயணம் சென்றதமிழகத்தைச் சேர்ந்த 116 பேரும் பத்திரமாக செப்.11ம்தேதி இந்தியா திரும்பிவிட்டனர்.

நேபாளத்தில் சிக்கித் தவித்து வரும் தமிழர்கள் தங்களது விவரங்களை தெரிவிக்கவும், நேபாளத்தில் சிக்கியுள்ள தங்களது குடும்பஉறுப்பினர்களின் நிலைகுறித்து தெரிந்து கொள்வதற்கும் டெல்லி தமிழ்நாடு இல்லத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளகட்டுப்பாட்டு அறையைத் தொடர்பு கொள்ளலாம். – என்றுள்ளது.

# இனக் கலவரத்தினால் பாதிக்கப்பட்ட மணிப்பூருக்கு மோடி இன்று பயணம்

இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட மணிப்பூருக்கு, பிரதமர் மோடி இன்று செல்கிறார். அங்கு 7,300 கோடி ரூபா மதிப்பிலான திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

வட கிழக்கு மாநிலமான மணிப்பூரில் குகி – மைத்தேயி மக்கள் இடையே கடந்த 2023 மே மாதத்தில் மோதல் ஏற்பட்டது. இம்பால் போன்ற சமதளப் பகுதிகளில் வசிக்கும் மைத்தேயி மக்கள் தங்களுக்கு பழங்குடியின அந்தஸ்து வழங்க வேண்டும் என்று நீண்டநாள்களாக வலியுறுத்தி வருகின்றனர்.

அதற்கு எதிர்ப்பு தெரிவித்து மலைப் பகுதிகளில் வசிக்கும் குகி பழங்குடியின மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர் இருதரப்புக்கும் இடையே மோதல் ஏற்பட்டு, வன்முறையாக மாறியது. இதில் 260 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். ஏராளமானோர் அண்டை மாநிலங்களில் தஞ்சம் அடைந்தனர். பலர் இடம்பெயர்ந்துள்ளனர்.

இரு பிரிவுகளையும் சேர்ந்த மூத்த தலைவர்களுடன் மத்திய, மாநில அரசுகள் அமைதி பேச்சுவார்த்தை நடத்தின. தற்போது இயல்புநிலை திரும்பி வருகிறது.

இந்நிலையில், இனக் கலவரத்துக்கு பிறகு முதல் முறையாக பிரதமர் மோடி இன்று மணிப்பூர் செல்கிறார். இதுகுறித்து தலைநகர் இம்பாலில் மாநில தலைமைச் செயலர் புனித் குமார் கோயல் நேற்று கருத்து தெரிவிக்கையில்,

“மிசோரம் மாநிலத்தில் பைரபி – சாய்ரங் ரயில் பாதை திட்டத்தை பிரதமர் மோடி இன்று தொடங்கி வைக்கிறார். அந்த நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்டு பிற்பகல் 12.30 மணிக்கு மணிப்பூர் மாநிலம் சுராசந்த்பூர் மாவட்டத்துக்கு வருகிறார். அங்கு குகி – மைத்தேயி கலவரத்தால் இடம்



பெயர்ந்த மக்களிடம் உரையாடுகிறார்.

பின்னர், 7,300 கோடி ரூபா மதிப்பிலான நலத் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார். அமைதி மைதானத்தில் நடைபெறும் கூட்டத்தில் உரையாற்றுகிறார். அங்கிருந்து, தலைநகர் இம்பாலுக்கு பிரதமர் மோடி செல்கிறார். அங்கு பிற்பகல் 2.30 மணி அளவில் 1,200 கோடி ரூபா மதிப்பிலான திட்டங்களை தொடங்கி வைக்கிறார். பிரதமரின் வருகை, மணிப்பூரில் முழு அமைதி ஏற்படவும், இயல்புநிலை திரும்பவும், மாநிலத்தின் வளர்ச்சிக்கும் வழிவகுக்கும்.” என்றார்.

‘பிரதமர் மணிப்பூர் செல்வது வரவேற்கத்தக்கது’ என்று மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி கூறியுள்ளார்.

பிரதமர் வருகையை முன்னிட்டு மணிப்பூர் முழுவதும் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.






# நேபாளத்தின் இடைக்கால பிரதமராக முன்னாள் நீதியரசர் சுஷிலா கார்க்கி!

நேபாளத்தின் இடைக்கால பிரதமராக முன்னாள் பிரதம நீதியரசர் சுஷிலா கார்க்கி (Sushila Karki) நியமிக்கப்பட்டுள்ளார். இவர் நேபாளத்தை வழிநடத்தும் முதல் பெண்மணி ஆவார் என வெளிநாட்டு ஊடகங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

இடைக்கால நிர்வாகத்தின் தலைவராக பதவியேற்கவுள்ளார் என்று அந்த செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி பௌடெல், இராணுவத் தளபதி அசோக் ராஜ் சிக்டெல் மற்றும் நேபாளத்தின் மிக மோசமான எழுச்சிக்கு தலைமை தாங்கிய போராட்டக்காரர்கள் இடையே நடந்த முத்தரப்புப் பேச்சுகளைத் தொடர்ந்து, ஜனாதிபதி ராம்சந்திர பௌடெல் அலுவலகம் கார்க்கியின் நியமனத்தை அறிவித்தது.

73 வயதான கார்க்கியுடன் மேலும் இரண்டு அமைச்சர்களும் பதவியேற்பார்கள் என்று செய்தி வெளியாகியுள்ளது.

தலைமை நீதிபதியாகப் பணியாற்றிய ஒரே பெண்மணியான கார்கி, நேர்மை, மற்றும் ஊழலுக்கு எதிரான நிலைப்பாட்டுக்கான அவரது நற்பெயரை மேற்கோள் காட்டி போராட்டக்காரர்களின் விருப்பமான தேர்வாக இருந்தார்.

2017 ஆம் ஆண்டின் நடுப்பகுதி வரை சுமார் ஒரு வருடம் அவர் உயர் நீதித்துறையில் பதவி வகித்தார்.

26 சமூக வலைத்தளங்களுக்கு அந்த நாட்டில் தடை விதிக்கப்பட்டதை அடுத்து இளைஞர்கள் அரசுக்கு எதிராகப் பாரிய ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

பின்னர் போராட்டம் தீவிரமான நிலையில், நாடாளுமன்றம், அரச கட்டடங்கள், அரசியல்வாதிகளின் வீடுகள் உள்ளிட்ட பல கட்டடங்கள் தீ வைத்து எரிக்கப்பட்டன.

இந்நிலையில் அந்த நாட்டு பிரதமராக செயற்பட்ட கே.பி சர்மா ஒலி தலைமையிலான அரசு பதவி விலகியது. அதன் பின்னர் நாட்டின் சட்ட ஒழுங்கை பாதுகாக்கும் வகையில் நேபாள இராணுவத்தினர் அதனை பொறுப்பேற்ற நிலையில், போராட்டங்கள் கைவிடப்பட்டு அந்த நாடு இயல்பு நிலைக்குத் திரும்பியது.

இந்த நிலையிலேயே நேபாளத்துக்கு இடைக்கால பிரதமர் நியமிக்கப்பட்டுள்ளார்.

# பாலஸ்தீன நாடு என்ற ஒன்று இல்லை அந்த நிலம் எங்களுக்குச் சொந்தம்!

## இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு தெரிவிப்பு



இனி பாலஸ்தீன நாடு என்ற ஒன்று இல்லை, அந்த நிலம் தங்களுக்கு சொந்தம் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீனத்தின் மேற்கு கரையில் மேலும் இஸ்ரேலிய குடியேற்றத்தை விரிவுபடுத்தும் சர்ச்சைக்குரிய ஈ - 1 குடியேற்ற விரிவாக்க திட்டத்தில் நேற்று முன்தினம் நெதன்யாகு கையெழுத்திட்டார்.

சர்வதேச அழுத்தத்தால் பல ஆண்டுகளாக முடங்கிக் கிடந்த ஈ–1 திட்ட பணிகள் கடந்த மார்ச் மாதத்தில் தொடங்கின.

தற்போதைய நிலவரப்படி மேற்குக் கரை மற்றும் கிழக்கு ஜெருசலேமில் உள்ள 300 சட்டவிரோத குடியிருப்புகளில் சுமார் 700,000 இஸ்ரேலிய குடியேறிகள் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது இஸ்ரேலிய பிரதமர் நெதன்யாகு கருத்துத் தெரிவிக்கையில், “எங்கள் வாக்குறுதிகள் நிறைவேறி வருகின்றன. இனி பலஸ்தீன நாடு என்று எதுவுமில்லை.

இந்த நிலம் எங்களுடையது மட்டுமே. இங்கு இன்னும் ஆயிரக்கணக்கான வீடுகள் கட்டப்படும். நமது கலாசாரம், நிலம் பாதுகாக்கப்படும்.

மேற்குக் கரையின் மக்கள் தொகை இரட்டிப்பாகும். இங்கு பல சிறந்த விடயங்கள் நடக்கும்.– என்றார்.



# பிரேசில் முன்னாள் ஜனாதிபதிக்கு 27 ஆண்டுகள் சிறைத் தண்டனை!

பிரேசில் முன்னாள் அதிபர் ஜெய்ர் போல்சனாரோவுக்கு அந்த நாட்டு உச்ச நீதிமன்றம் 27 ஆண்டுகள் 3 மாதம் சிறைத் தண்டனை விதித்துள்ளது. 2022 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் தோல்வி அடைந்ததை அடுத்து அதிகாரத்தை மீண்டும் கைப்பற்ற சதி செய்த குற்றத்துக்காக இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பிரேசிலின் லிபரல் கட்சியைச் சேர்ந்த ஜெய்ர் போல்சனாரோ கடந்த 2019 முதல் 2022 வரை அந்த நாட்டின் அதிபராக இருந்தார். வலதுசாரி கட்சித் தலைவரான இவர், 2022 இல் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் தொழிலாளர் கட்சியைச் சேர்ந்த லூயிஸ் இனாசியோ லூலா டா சில்வாவிடம் தோல்வி அடைந்தார். எனினும், மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்ற ஜெய்ர் போல்சனாரோ சதி செய்தார் என்று குற்றச்சாட்டு எழுந்தது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இது தொடர்பான வழக்கில் தீர்ப்பளித்த 5 நீதிபதிகள் அடங்கிய பிரேசில் உச்ச நீதிமன்ற அமர்வு, குற்றச்சாட்டை உறுதிப்படுத்தியது. 5 நீதிபதிகளில் 4 பேர் ஜெய்ர் போல்சனாரோவை குற்றவாளி என அறிவித்துள்ளனர். ஐந்தாவது நீதிபதியின் தீர்ப்பை அடுத்தே தண்டனை இறுதி செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரத்தில், அவர் மீதான மற்ற குற்றச்சாட்டுக்களும் நிரூபிக்கப்பட்டால் தண்டனைக் காலம் 40 ஆண்டுகளுக்கும் மேலாக அதிகரிக்கலாம் என்றும் கூறப்படுகிறது. தற்போது வீட்டுக் காவலில் உள்ள 70 வயது ஜெய்ர் போல்சனாரோ, தண்டனையை எதிர்த்து மேல் முறையீடு செய்யலாம்.

ஜெய்ர் போல்சனாரோவுக்கு விதிக்கப்பட்டுள்ள தண்டனை குறித்து கருத்து தெரிவித்துள்ள அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப், தீர்ப்பு மகிழ்ச்சியளிக்கவில்லை என்றும் அவர் மிகவும் சிறந்த நபர் என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும், விசாரணையை 'சூனிய வேட்டை' என்றும் விமர்சித்துள்ளார்.

# இஸ்ரேல் - பாலஸ்தீனத்துக்கு இடையிலான இரு நாடுகள் தீர்வுக்கு புதிய ஒரு யோசனை!

## நியூயோர்க் பிரகடனத்துக்கு ஐ.நா. பொதுச் சபை ஒப்புதல்



ஹமாஸின் தலையீடு இல்லாமல் இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனத்துக்கு இடையிலான இரு நாடுகள் தீர்வுக்கு புதிய உயிர் கொடுக்கும் ஒரு யோசனையான நியூயோர்க் பிரகடனத்துக்கு ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை ஒப்புதல் வழங்கியுள்ளது.

இந்த யோசனைக்கு இலங்கை உட்பட 142 நாடுகள் ஆதரவாக வாக்களித்தன. இஸ்ரேல் மற்றும் முக்கிய நட்பு நாடான அமெரிக்கா உட்பட10 நாடுகள் எதிராக வாக்களித்தன. 12 வாக்குகள் வாக்களிக்கவில்லை.

இந்த பிரகடனம், ஹமாஸை தெளிவாகக் கண்டிக்கும், அதேநேரம் அதன் ஆயுதங்களை ஒப்படைகக வேண்டும் என்று கோருகிறது.

ஹமாஸ் அனைத்து பணயக் கைதிகளையும் விடுவிக்க வேண்டும் என்றும் அந்த பிரகடனம் வலியுறுத்துகிறது.

காசாவில் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான கூட்டு நடவடிக்கைக்கும் இந்தப் பிரகடனம் அழைப்பு விடுத்துள்ளது.









# நிர்மாணக் கைத்தொழில் துறையினருடன் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சந்திப்பு

நிர்மாணக் கைத்தொழில் சார்ந்த தரப்பினருக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டங்கள் குறித்த பூர்வாங்க கலந்துரையாடல் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

நிர்மாணச் சேவைகள் மற்றும் தொடர்புடைய பொருள்கள், மின்சார கேபிள்கள் ஏற்றுமதியிலிருந்து பொருளாதாரத்திற்கு பங்களிப்பை அதிகரிக்கும் நோக்கில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்தத் துறையை ஏற்றுமதித் துறையாக வளர்ப்பதில் எதிர்கொள்ள வேண்டிய சவால்கள், முன்மொழிவுகள் மற்றும் தீர்வுகள் குறித்து இதன் போது ஆராயப்பட்டது.

அரசாங்க நிர்மாணங்களுக்கு அப்பால் நிர்மாணக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்குத் தேவையான பொருளாதார சூழலை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டிருப்பதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, இந்த நாட்டில் நிர்மாணத் துறையில் ஏற்பட்ட ஒழுங்கற்ற தன்மை காரணமாக கடந்த காலங்களில் முறைகேடுகள் நிகழ்ந்துள்ளதாகவும், அதனை ஒழுங்கமைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

நிர்மாணத் துறை எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அவற்றைத் தீர்க்க அரசாங்கம் எவ்வாறு தலையிட முடியும் என்பது குறித்தும் ஆராயப்பட்டது.

தற்போது நிர்மாணத்துறை எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து துறைசார் பிரதானிகள் ஜனாதிபதிக்கு எடுத்துரைத்தனர்.

இந்தக் கலந்துரையாடலில், ஜனாதிபதியின் சிரேஸ்ட மேலதிகச் செயலாளர் ரஸல் அபோன்சு , ஏற்றுமதி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் மங்கள விஜேசிங்க, நிதி அமைச்சின் சிரேஸ்ட அதிகாரிகள், நிர்மாணத்துறை பிரதானிகள் மற்றும் மின்சார கேபிள் உற்பத்தித் துறை பிரதானிகள் பங்கேற்றனர்.









# மன்னார் காற்றாலை போராட்டத்திற்கு ஆதரவாக முல்லையில் இருந்து நடந்து வந்த இளைஞர்கள்

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் காற்றாலை போராட்டத் திற்கு ஆதரவாக முல்லைத்தீவு இளை ஞர்கள் இருவர் மன்னார் நோக்கி நடை பயணத்தை ஆரம்பித்த நிலையில் இரு இளைஞர்களும் நேற்று வெள்ளிக்கிழமை மாலை மன்னாரை வந்தடைந்தனர்.

மன்னார் பகுதியில் அமைக்கப்பட உள்ள காற்றாலைக்கு எதிர்ப்பு தெரி விக்கும் முகமாக முல்லைத்தீவு மாவட் டத்தின் முள்ளிவாய்க்காலில் இருந்து இரண்டு இளைஞர்கள் நடைபயணம் ஒன்றை கடந்த புதன்கிழமை ஆரம் பித்தனர்.

அவர்கள் முல்லைத்தீவிலிருந்து கால்நடையாக பயணித்தமையோடு தங்களின் கோரிக்கை மற்றும் நியா யங்கள் அடங்கிய துண்டு பிரசுரங்களை வீதி ஓரங்களில் உள்ள வர்த்தக நிலை யங்கள் மற்றும் பொது மக்களுக்கு வழங்கி வந்தனர்.

இந்த நிலையில் இரு இளைஞர் களும் நேற்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் மன்னார் தள்ளாடி சந் தியை வந்தடைந்தனர்.

இந்த நிலையில் இரு இளைஞர்க ளையும் மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ்.மாக்கஸ் அடிகளார் மற்றும் மன்னார் நகரில் போராட்டத்தை முன்னெடுத்து வரும் மக்கள் மற்றும் இளையோர் ஒன்றி ணைந்து வரவேற்றனர்.

பின்னர் தள்ளாடி சந்தியில் இருந்து மன்னார் பஜார் பகுதி வரை அக்குழுவி னர் நடை பயணமாக வருகை தந்து காற்றாலைக்கு எதிரான துண்டுப் பிர சுரங்களை பஜார் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கு விநியோகித்த னர்.







# நிமலராஜன் படுகொலை பற்றிய அறிக்கை நேற்றுத் திருகோணமலையிலும் வெளியீடு









**(ஏ.எச்.ஹஸ்பர்)**

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலைச் சம்பவம் தொடர்பான ஆய்வு அறிக்கை நேற்று மாலை திருகோணமலையில திருகோணமலை வெலிக்கடை தியாகிகள் திறந்த வெளி அரங்குக்கு முன்னால் வடகிழக்கு சமூக இயக்கத்தின் ஏற்பாட்டில் வெளியிடப்பட்டது.

இதனை தொடர்ந்து உணர்வு பூர்வமாக மெழுகுவர்த்தி ஏற்றப்பட்டு நிமலராஜன் நினைவு கூரப்பட்டார். ஊடகப் படுகொலை தொடர்பாகவும் நிமலராஜனின் படுகொலை தொடர்பாகவும் நினைவுப் பேருரை நிகழ்த்தப்பட்டது.

இதில் திருகோணமலை மாவட்டத்தை சேர்ந்த பிரதேச ஊடகவியலாளர்கள்,சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.படுகொலை செய்யப்பட்ட ஊடகரின் வழக்கு தொடர்பிலான அறிக்கை அடங்கிய புத்தகம் விநியோகிக்கப்பட்டது.

இலங்கை அரசாங்கம் சர்வதேச நீதிப்பொறி முறை ஊடாக நீதியை படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்காகப் பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டும். இனப்படுகொலை செய்யப்பட்ட ஒன்றாகவே ஊடகவியலாளர்களின் கொலை கருதப்படுகிறது எனவும் இதில் கலந்து கொண்ட சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

இதில் வடகிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஒருங்கிணைப்பாளர் கண்டுமணி லவகுசராசா மற்றும் பிரதேச ஊடகவியலாளர்கள்,சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.











# பத்தாயிரம் ரூபா இலஞ்சமாகப் பெற்ற பொலிஸ் அலுவலருக்கு விளக்கமறியல்

(பாறுக் ஷிஹான்)

பத்தாயிரம் ரூபா இலஞ்சமாகப் பெற்ற பொலிஸ் உத்தியோகத்தரை எதிர்வரும் செப்டம்பர் மாதம் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சம்மாந்துறை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை சம்மாந்துறை நீதிமன்ற நீதிவான் டி.கருணாகரன் முன்னிலையில் சம்பந்தப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தரை ஆஜர்படுத்திய போதே அவர் இவ்வாறு உத்தரவிட்டார்.

பிணை பெற்றுத்தருவார் எனக் கூறி ஒருவரிடம் இலஞ்சம் கோரிய குற்றச்சாட்டின் அடிப்படையில் பொலிஸ் உத்தியோகத்தரை இலஞ்சம் மற்றும் ஊழல்




ஆணைக்குழு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் காரைதீவு பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் 32 வயது மதிக்கத்தக்க பொலிஸ் உத்தியோகத்தர் தன்னிடம் பத்தாயிரம் ரூபா இலஞ்சம் கோருகின்றார் எனப் பொதுப் போக்குவரத்து செயற்பாட்டில் ஈடுபட்ட நபர் அண்மையில் கொழும்பிலுள்ள இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்திருந்தார்.

இதனடிப்படையில் ஆணைக்குழு அதிகாரிகளின் ஆலோசனைக்கமைய சம்பவதினமான நேற்று முன்தினம் மாலை அந்தப் பொலிஸ் உத்தியோகத்தர் கூறியமைக்கு அமைவாக லஞ்சப் பணத்தை காரைதீவு பொலிஸ் நிலையத்தில் வைத்து அந்நபர் வழங்கியுள்ளார்.

இதன்போது அங்கு மாறு வேடத்தில் காத்திருந்த இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவின் அதிகாரிகள் அந்தப் பொலிஸ் உத்தியோகத்தர் இலஞ்ச பணத்தை வாங்கும் போது கைது செய்திருந்தனர்.

# மட்டக்களப்பு மாவட்டத்திற்கான சுற்றுலாத் தகவல் மையம் திறப்பு

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பில் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கான விசேட கலந்துரையாடல் மற்றும் மாவட்டத்திற்கான சுற்றுலாத் தகவல் மையத்தைத் திறந்து வைத்தல் ஆகியன மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் பழைய மாவட்ட செயலகத்தில் நேற்று இடம் பெற்றது.

மாவட்டத்தின் 14 பிரதேச செயலக பிரிவுகளில் உள்ள சுற்றுலா இடங்களுக்கும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளைக் கவர்தல் மற்றும் நவீன மயப்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள் மூலம் சுற்றுலாத் துறையை மேம்படுத்துதல் ஆகியன தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

மேலும் சமூக மட்டத்தில் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என இதன் போது சுட்டிக் காட்டப்பட்டது.

மேலும் சுற்றுலா அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் துரிதகதியில் மேற்கொள்ளுமாறு அரசாங்க அதிபர் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்களான திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்த், திருமதி. நவரூபரஞ்சனி முகுந்தன் (காணி) , பிரதம பொறியியலாளர் ரீ. சுமன், பிரதம கணக்காளர் காயத்திரி ரமேஷ், பிரதேச செயலாளர்கள், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்களான ரி.நிர்மலன், வி.நவநீதன், மாவட்ட சுற்றுலாத் துறை அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி மதனா தயாகரன் மற்றும் சுற்றுலாத் துறைசார் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.











# காணாமற்போனவர்கள் தொடர்பில் மட்டக்களப்பில் நேற்று விசாரணை

(வாலகிருஸ்ணா)

காணாமற்போன ஆள்கள் பற்றிய அலுவலகத்தின் மட்டக்களப்பு பிராந்திய அலுவலகத்தின் ஏற்பாட்டில் நேற்றைய தினம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

ஏறாவூர்ப்பற்று செங்கலடி – பிரதேச செயலகத்தில் ஆணைக்குழுவின் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

வாழைச்சேனை, கிரான், வாகரை, செங்கலடி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த காணாமலாக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்கள் 35 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டு வருகை தந்த 33 பேரிடம் அங்கு விசாரணைகள் இடம்பெற்றன.

காணமற்போன ஆள்களின் உறவினர்களினால் முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பில் காணாமற்போன ஆள்கள் பற்றிய கொழும்பு பிராந்திய அலுவலகத்தில் இருந்து வருகை தந்த வடிவேல் கிருஷ்ணமூர்த்தி மற்றும் தம் பிஜயா யோகராஜா ஆகியோர் தலைமையிலான அலுவலக உத்தியோகத்தர்கள் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதேபோன்று மட்டக்களப்பு மாவட்ட செயலகத்திலும் நேற்றைய தினம் காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தினால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.













# உள்ளகப் பொறிமுறையை ஒருபோதும் ஏற்க மாட்டோம்

## நாடாளுமன்றத்தில் அடித்துக் கூறினார் செல்வம் எம்.பி.



உள்ளகப் பொறிமுறையை ஒருபோதும் தாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்றும், இந்த விடயத்தில் அரசாங்கம் நியாயமாக நடந்து கொள்ளும் என்று தாங்கள் நம்புகின்றார்கள் என்றும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நடைபெற்ற தேசிய கணக்காய்வு திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஐ.நா. தீர்மானம் மிக இறுக்கமாகியுள்ளது.எங்கள்மக்களுக்குஇழைக்கப்பட்ட அநீதிக்கு நியாயத்தை கோரும் வகையில் ஐ.நா. தீர்மானம் மிகவும் வலுவாக இருக்கும் நிலைமையில், வெளிவிவகார அமைச்சர் உள்ளக பொறிமுறையில் மனித உரிமை மீறல் தொடர்பான விடயங்களை கையாளப் போவதாக கூறுகின்றார். அது எப்படி சுடச் சொன்னவரை காப்பாற்றிவிட்டு சுட்டவரை விசாரிப்பதா? களவெடுக்க சொன்னவனை விட்டு விட்டு களவெடுத்தவனை விசாரிப்பதா? எங்களை பொறுத்தவரையில் உள்ளக விசாரணைகளை நாங்கள் ஒருபோதும் ஏற்க மாட்டோம். சர்வதேச கண்காணிப்புடன் விசாரணைகள் நடக்க வேண்டும். அரசாங்கம் நியாயமாக நடந்துகொள்ளும் என்று நம்புகின்றோம்.

கடந்த காலங்களில் மனித உரிமை மீறல்களில் இந்த அரசாங்கத்தின் ஒரு அமைப்பு ஈடுபட்டுள்ளது. அத்துடன் கடந்த காலங்களில் போராட்டத்தை நசுக்கிய, போராட்டத்தில் மக்களைக் கொன்று குவித்தவர்களை தண்டிக்க வேண்டும் என்பதே பிரதான நோக்கமாகும். இதனால் இந்த விடயத்தில் உள்ளக விசாரணையை ஏற்றுக் கொள்ள முடியாது.

இதேவேளை மனித உரிமை மீறல் தொடர்பில் இந்தியா தனது கருத்தை ஆழமாக பதிவு செய்துள்ளது. இதனை பாராட்டுகின்றோம். மாகாண சபை முறைமை, அரசியல் ரீதியிலான அதிகார பரவலாக்கலை செய்ய வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது. இதனை வரவேற்கின்றோம். – என்றார்.



# 11 வயதுச் சிறுமியைத் துஷ்பிரயோகம் செய்த சிறிய தந்தை சாட்சியை அச்சுறுத்தினாராம்!

## விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவு

(கனகராசா சரவணன்)

பதினொரு வயதுச் சிறுமி ஒருவரைத் துஷ்பிரயோகம் செய்தார் எனக் கூறப்படும் சிறுமியின் சிறிய தந்தைக்கு எதிராக இடம்பெற்றுவரும் வழக்கு விசாரணையில் சிறுமியின் தாயாரைப் பொய்ச் சாட்சி அளிக்குமாறு கூறினார் எனத் தெரிவித்து சிறிய தந்தையை சாட்சியை அச்சுறுத்திய குற்றச்சாட்டில் எதிர்வரும் ஒக்டோபர் 22 வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி கடந்த புதன்கிழமை உத்தரவிட்டார்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பிரதேசம் ஒன்றில் கடந்த 2016 ஆம் ஆண்டு 11 வயது சிறுமி ஒருவரைப் பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்ட குற்றச்சாட்டில் சிறுமியின் சிறிய தந்தையார் கைது செய்யப்பட்டு ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் பிணையில் வெளிந்துள்ளார்.

ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றில் இடம்பெற்று வந்த வழக்கு கடந்த 6 மாதத்திற்கு முன்னர் மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டு வழக்கு விசாரணை இடம்பெற்று வந்துள்ளது.

இந்த நிலையில் இவ்வழக்கு மேல் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் கடந்த புதன்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது அங்கு சிறுமியின் தாயார் சிறுமிக்கு அப்படி ஒரு சம்பவம் இடம்பெறவில்லை என சாட்சியமளித்துள்ளார். இதனைத் தொடர்ந்து சிறிய தந்தையார் சிறுமியின் தாயாரை பொய் சாட்சியம் அளிக்குமாறு அச்சுறுத்தினார் என்பது நீதிமன்ற விசாரணையில் தெரியவந்தது.

இதனையடுத்து சாட்சியை அச்சுறுத்திய குற்றச்சாட்டில் அந்தச் சிறுமியின் சிறிய தந்தையாரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டு வழக்கை அடுத்த மாதம் 22 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

# காற்றாலைச் சர்ச்சைக்கு நீதியான முடிவு தேவை இல்லையேல் மன்னார் போர்க்களமாக மாறலாம்!

## ஜனாதிபதியின் ஒரு மாத கால அவகாச முடிவில் இப்படி எச்சரிக்கை




(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

“எனவே அரசாங்கம் எமது கோரிக்கைகளை ஏற்று செவிசாய்க்க வேண்டும். இல்லை என்றால் எமது போராட்டம் வேறு திசைகளில் விரிவடையும். மன்னார் மாவட்டம் ஒரு போர்க்களமாக மாற்றமடையும் என்பதை இந்த அரசிற்கு கூறிக் கொள்ள விரும்புகிறேன். இந்த போராட்டம் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டமும் இல்லை. அரசினுடைய கட்சிக்கு எதிரானதும் இல்லை. மாறாக எமது உரிமைக்கான போராட்டமாக அமைந்துள்ளது.

– மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மாக்கஸ் அடிகளார் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மன்னாரில் அமைக்கப்பட்டு வருகின்ற காற்றாலை மின் கோபுரங்கள் தொடர்பில் எழுந்துள்ள சர்ச்சைகள் குறித்து துரித நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்து ஜனாதிபதியால் வழங்கப்பட்ட ஒரு மாதக் காலக்கெடு நேற்று வெள்ளிக்கிழமையுடன் நிறைவடைந்த நிலையில், ஜனாதிபதியின் சாதகமான பதிலைத் தாங்கள் எதிர்பார்த்துள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் காற்றாலை,கனிய மண் அகழ்விற்கு எதிரான போராட்டம் நேற்று வெள்ளிக்கிழமை 41 ஆவது நாளாக இடம் பெற்ற நிலையில் அங்கு நடந்த விசேட ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மன்னார் மக்களின் இருப்பிடங்களையும்,வாழ்விடங்களையும், பாதுகாக்கும் வகையில் மன்னார் பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் மன்னார் மக்கள் மற்றும் இளையோர் இணைந்து முன்னெடுத்து வருகின்ற போராட்டம் நேற்று வெள்ளிக்கிழமை 41 ஆவது நாளைக் கடந்து செல்கின்றது.

இந்தப் போராட்டத்திற்கு ஒரு சுமுகத் தீர்வு காண்பது தொடர்பாக ஜனாதிபதியால் ஒரு மாத காலக்கெடு வழங்கப்பட்டுள்ளது. அது நேற்று வெள்ளிக்கிழமையுடன் முடிவடைந்தது.

ஜனாதிபதியின் அலுவலகத்தில் இருந்து எமது போராட்டத்தின் பலனாக நல்ல முடிவு வரும் என எதிர்பார்த்து காத்திருந்தோம்.

இதுவரை எந்த முடிவுகளும் ஜனாதிபதியிடம் இருந்து எமக்குக் கிடைக்கவில்லை. பலதடவைகள் நாங்கள் மன்னார் மாவட்டச் செயலகத்துடன் தொடர்பு கொண்டு கடந்த 30 நாள்களுக்குள் நடந்த செயல் திட்டங்கள் குறித்து கேட்டோம். எமக்கு எவ்வித தகவல்களும் வழங்கப்படாமை குறித்து தெரிவித்தோம்.

எனினும் தமக்கும் எவ்வித அறிவித்தல்களும் கிடைக்கவில்லை என்ற பதில் எமக்கு கிடைத்தது. நாங்கள் முக்கிய மூன்று கோரிக்கைகளை ஜனாதிபதிக்கு முன் வைத்தோம்.,புதிதாக அமைக்கப்பட்டு வரும் 04 காற்றாலைகள், மேலும் அமைக்கப்படவுள்ள 10 காற்றாலை வேலைத்திட்டங்களும் உடன் நிறுத்தப்பட்டு, அவை வேறு இடங்களுக்கு மாற்றப்பட வேண்டும்.

மன்னார் மாவட்டத்தில் இருந்து கனிய மணல் அகழ்வு முன்னெடுக்கப்படக் கூடாது, அதைத் தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையையும், மன்னாரில் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்ட காற்றாலைத் திட்டத்தினால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் உடன் நிவர்த்தி செய்யப்பட்டு, பாதிக்கப்பட்ட மக்களைத் துயரங்களில் இருந்து விடுவிக்க வேண்டும் என்ற மூன்று கோரிக்கைகளையும் நாங்கள் போராட்டக் குழு சார்பாக ஜனாதிபதியிடம் முன் வைத்தோம்.

தற்போது போராட்டம் 41 ஆவது நாளை கடக்கின்றது.இதுவரை அரச தரப்பில் இருந்து எங்களுக்கு சாதகமான பதில் எதுவும் கிடைக்கவில்லை. இது நாட்டுக்கான போராட்டம். நாட்டில் வாழ்கின்ற அனைத்து மக்களும் சம உரிமையுடன் வாழ வேண்டும் என்பதற்கான போராட்டம். எங்களுடைய கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு உரிய முறையில் உறுதிமொழி தந்தால் இப்போராட்டம் கைவிடப்படும்.


நாட்டின் அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு வழங்கவும் நாங்கள் தயாராக உள்ளோம். காற்றாலைத் திட்டத்திற்கு நாங்கள் எதிர்ப்பு இல்லை.ஆனால் மன்னார் மாவட்டத்தில் மக்களின் வாழ்வாதாரத்தையும், வாழிடத்தையும் பாதிக்கின்ற எந்த திட்டமும் எமக்கு வேண்டாம். எனவே அரசாங்கம் எமது கோரிக்கைகளை ஏற்று செவிசாய்க்க வேண்டும். இல்லை என்றால் எமது போராட்டம் வேறு திசைகளில் விரிவடையும்.

மன்னார் மாவட்டம் ஒரு போர்க்களமாக மாற்றமடையும் என்பதை இந்த அரசிற்கு கூறிக் கொள்ள விரும்புகிறேன். இந்த போராட்டம் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டமும் இல்லை. அரசினுடைய கட்சிக்கு எதிரானதும் இல்லை. மாறாக எமது உரிமைக்கான போராட்டமாக அமைந்துள்ளது.

எமது வாழ்விடங்களையும் வளங்களையும் பாதுகாப்பதற்கான உயர்ந்த ஒரு போராட்டமாக அமைந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

# லஞ்ச, ஊழல் ஆணைக்குழு வியாழனன்று கல்முனை மாநகர சபையில் விசாரணை

(பாறுக் ஷிஹான்)




கல்முனை மாநகர சபையில் கடந்த காலங்களில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் முறைகேடுகள் தொடர்பில் இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழு அதிகாரிகள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த காலங்களில் கல்முனை மாநகர சபையில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் முறைகேடுகள், அதிகாரத் துஷ்பிரயோகங்கள், ஊழல்கள் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கமைய வியாழக்கிழமை இலஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழு அதிகாரிகள் அங்கு சென்று பல்வேறு விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது மாநகர சபையில் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட வேலைவாய்ப்பு, முறையற்ற ஆள் சேர்ப்பு, வளங்கள் மீதான துஷ்பிரயோகம், முறையற்ற கேள்விக் கோரல்கள், வாகனப் பராமரிப்பில் துஷ்பிரயோகம் உட்பட பல்வேறு விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன.

மேலும் கடந்த காலங்களில் இந்த மாநகர சபையில் கடமையாற்றிய ஆணையாளர் உட்பட உயரதிகாரிகளின் அதிகாரத் துஷ்பிரயோகங்கள் குறித்தும் புலனாய்வு மேற்கொள்ளப்பட்டது. அவை தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கமைய ஆவணங்கள் மற்றும் ஆதாரங்கள் திரட்டப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

இது தவிர கடந்த காலங்களில் கல்முனை மாநகர சபையில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் முறைகேடுகள், அதிகார துஷ்பிரயோகங்கள் தொடர்பில் பல நீதிமன்றங்களில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளமையும் சுட்டிக்காட்டத்தக்கது.




# இந்தியாவுக்கு ரெலோ நன்றி தெரிவிப்பு

கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகருடன் ரெலோ கட்சியின் பிரமுகர்கள் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை மதியம் கொழும்பில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகரகத்தில் இச்சந்திப்பு நடைபெற்றது.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலொவின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதனும், அக்கட்சியின் நிதிச் செயலாளரும் பேச்சாளருமான குருசுவாமி சுரேந்திரனும் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

அதன்போது செப்டம்பர் 8 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலின் 60 ஆவது கூட்டத்தொடரில், இலங்கை தமிழர்களின் அபிலாசைகளான அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு, நீதி, கௌரவம் மற்றும் நல்லிணக்க செயற்பாடுகளை இலங்கை அரசு முன்னெடுக்க வேண்டும் என்று வலியுறுத்திய இந்தியாவின் உறுதியான நிலைப்பாட்டை தாம் வரவேற்கின்றனர் எனத் ரெலோ தலைவர் தெரிவித்தார்.

அரசியல் யாப்பை முழுமையாக நடைமுறைப்படுத்தும் வகையிலே விரைந்து மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியமை நீண்ட காலமாக இழுத்தடிக்கப்படும் மாகாண சபை தேர்தலை நடாத்த வழிவகுக்கும் எனவும் உயர்ஸ்தானிகரிடம் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் மன்னார் வைத்தியசாலையின் அபிவிருத்திக்கு 600 மில்லியன் ரூபாவை வழங்கி அப்பிரதேச மக்களின் நீண்ட கால சுகாதாரத் தேவையை நிறைவு செய்ய இந்தியா முன்வந்தமைக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி, பலாலி விமான நிலைய விஸ்தரிப்பு மற்றும் தலைமன்னார் ராமேஸ்வரம் கப்பல் போக்குவரத்து என்பவற்றில் இந்தியா தொடர்ந்தும் அக்கறையுடன் இருப்பதாகவும் விரைந்து அவற்றை நிறைவேறுவதற்கான தொடர் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன எனவும் இந்திய உயர்ஸ்தானிகர் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றுவதும் பொருளாதார அபிவிருத்தியை முன்னெடுப்பதும் சமாந்தரமாக செயல்படுத்தப்படுவது அவசியம் எனவும் அதில் இந்தியா அக்கறையோடு இருப்பதாகவும் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி என்பவற்றில் இந்தியா இதய சுத்தியோடும் உறுதியோடும் பயணிப்பதற்கு தமிழ் மக்கள் சார்பில் தாம் நன்றி கூறுகின்றனர் எனவும் ரெலோ தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மிகவும் ஆக்கபூர்வமான இச்சந்திப்பு கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் நடைபெற்றது என்றும் தெரிவிக்கப்பட்டது.

# உதய கம்மன்பிலவைக் கைது செய்வது குறித்து தற்போது எந்த முடிவும் எடுக்கப்படவில்லையாம்

முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பிலவை கைது செய்வது குறித்து தற்போது எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான உடன்படிக்கையின் கீழ் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தன்னைக் கைது செய்யத் தயாராகி வருவதாகவும், தன்னைக் கைது செய்வதைத் தடுக்க உத்தரவு பிறப்பிக்குமாறும் கோரி உதய



கம்மன்பில தாக்கல் செய்த ரிட் மனு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களம் சார்பாக ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் சுதர்ஷன டி சில்வா, மனுதாரர் உதய கம்மன்பிலவைக் கைது செய்வது குறித்து பொலிஸார் இதுவரை எந்த முடிவும் எடுக்கவில்லை என்று நீதிமன்றத்திற்குத் தெரிவித்தார்.

விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும், அதன் பின்னர் இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

அதன்படி, மனுவின் பரிசீலனை எதிர்வரும் 17 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டது.

# இன்றைய ராசி பலன்கள் -13.09.2025




இன்றைய நாள் சற்று மந்தமாக காணப்படும். ஆன்மீக ஈடுபாடு மன நிம்மதி மற்றும் ஆறுதலை அளிக்கும்.

வேலை தொடர்பான பயணம் காணப்படுகின்றது. அதன் மூலம் சுமாரான பலன்களே கிடைக்கும். கடின உழைப்பின் மூலம் மட்டுமே வெற்றி கிட்டும்.

மகிழ்ச்சியாக இருக்க அகந்தை உணர்வை தவிர்க்கவும். உங்கள் துணையுடன் மனம் திறந்து பழகவும்.

அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக கூடுதல் செலவுகள் ஏற்படும். இது உங்களுக்கு மிகுந்த கவலையை அளிக்கும்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். தலை வலி ஏற்பட வாய்ப்புள்ளது. அது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.




நீங்கள் தைரியமாக சரியான பாதையில் செயல்பட வேண்டியது அவசியம். உங்கள் பயத்தை ஒதுக்கித் தள்ளி நம்பிக்கையுடன் செயல்படுங்கள்.

உங்கள் பணிகளை திறம்பட ஆற்ற உங்களுக்கு பொறுமை அவசியம். நீங்கள் யோசித்து சிறப்பாக செயல்பட வேண்டும்.

உங்கள் துணையுடன் பேசும்போது இணக்கம் குறைந்து காணப்படும். முதல் முறை பேசிக்கொள்வது போல பேசுவீர்கள்.

இன்று கூடுதல் செலவுகள் ஏற்படும் என்பதால் உங்களுக்கு கவலை ஏற்படும். இது தவிர்க்க முடியாதது. எனவிய கவனமாக இருக்கவும்.

கண்களில் எரிச்சல் பாதிப்பை ஏற்படுத்தும். மருத்துவம் பார்த்துக் கொள்வது நல்லது.




நீங்கள் சுய முன்னேற்றப்பாதையில் செல்வீர்கள். நீங்கள் இன்று சில லட்சியங்களை அடைய வேண்டும் என்று உங்களை தயார் படுத்திக் கொண்டு இந்த நாளை சுமூகமாக்குவீர்கள்.

பணியிடச் சூழல் உங்களுக்கு சாதகமாக இருக்கும். உங்கள் பணியில் வெற்றி பெற உங்கள் மனதை செலுத்துவீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் நட்பாகவும் அன்பாகவும் நடந்து கொள்வீர்கள். பயணத்தின் போது இருவரும் உற்சாகமான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

கடின உழைப்பின் மூலம் மட்டுமே வெற்றி கிடைக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும்.

ஆரோக்கியம் பொதுவாக சிறப்பாக இருக்கும். அமைதியான அணுகுமுறை மூலம் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நம்பிக்கை உணர்வுடன் காணப்படுவீர்கள்.




இன்று பண வரவு காணப்படலாம். இன்று உங்கள் செயல்களை முடிப்பதற்கு திட்டமிடுவீர்கள். நீண்ட கால திட்டங்களுக்கு இந்த நாள் உகந்த நாள்.

உங்கள் பணியில் புதிய வாய்ப்புகள் வருவதற்கான வாய்ப்புகள் உள்ளது. கடின உழைப்பு மற்றும் சிறந்த முயற்சி மூலம் நீங்கள் சிறந்த நிலைக்கு வருவீர்கள். இதன் மூலம் உங்களுக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

நீங்கள் உங்கள் துணையுடன் வெளிப்படையாக பழகுவீர்கள். இதனால் இருவருக்கிடையே நல்லிணக்கம் வலுப்படும்.

உங்கள் நிதி நிலைமை திருப்திகரமாக இருக்கும். பணத்தை பயனுள்ள நோக்கத்திற்கு செலவு செய்வீர்கள்.

உடல் ஆரோக்கியம் பொதுவாக சிறப்பாக இருக்கும்.




கையிலுள்ள பணிகளை முடிப்பதற்கு நீங்கள் மிகுந்த முயற்சி எடுக்க வேண்டும்.பொதுவில் இன்றைய நாள் மிகவும் கடினமாக இருக்கும்.

கவனக் குறைவு காரணமாக பணியில் தவறுகள் நேரலாம். பணிகளை திறமையாக ஆற்ற ஆன்மீக ஈடுபாடு சிறந்தது.

உங்கள் துணையிடம் உணர்சிவசப்படுவீர்கள். இதனால் இருவருக்குமிடையே தன்னம்பிக்கை நிலை குறையும்.

நிதி நிலை வளர்ச்சி சற்று குறைவாக இருக்கும். உங்கள் செலவைக் குறைக்க சிறந்த திட்டமிடலை மேற்கொள்ள வேண்டும்.

உடல் ஆரோக்கியத்தில் சிறிது பாதிப்பு இருக்கும். உங்களுக்கு முதுகு வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்றைய நாள் முன்னேற்றத்திற்கு உகந்த நாள் அல்ல. உங்கள் அணுகுமுறையில் யதார்த்தம் தேவை.

உங்கள் பணிகளை மேற்கொள்ள பொறுமை அவசியம். பணிச்சுமையும் அதிகமாக காணப்படும்.

நீங்கள் உணர்ச்சி வசப்பட்டு உங்கள் துணையுடன் சண்டையிடுவீர்கள்.உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க இத்தகைய போக்கை தவிர்க்க வேண்டும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். அதிகரிக்கும் செலவுகள் கவலையை அளிக்கும்.

தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது. அமைதியாக கட்டுப்பாட்டுடன் இருப்பது நல்லது.




இன்று இனிமையான தருணங்கள் காத்திருக்கின்றன. பொழுதுபோக்கு நிகழ்ச்சியில் பங்கு பெறுவதன் மூலம் நீங்கள் பதட்டத்திலிருந்து விடுபடலாம்.

உங்கள் பணியைப் பொறுத்த வரை சுய வளர்ச்சிக்கு உற்சாகமான நேரம். புதிய முயற்சிகளும் சாத்தியம்.

உங்கள் துணையுடன் நண்பர் வீட்டு திருமணத்திற்கு செல்வீர்கள். இருவரும் உற்சாகமாக நேரத்தை கழிப்பீர்கள்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் குடும்பத்துடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள்.

சிறந்த மன உறுதி காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் திருப்தியாக உணர்வீர்கள்.




இன்றைய நாள் மிகவும் அற்புதமான நாள். இன்று உங்களிடம் அதிக ஆற்றலும் உறுதியும் காணப்படும்.

பணியில் உங்கள் முயற்சிக்கு வெற்றி கிட்டும். நீங்கள் தன்னம்பிக்கையுடன் பணிகளை மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையுடன் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். குடும்பத்தில் சுப நிகழ்சிகள் நடைபெறக் காண்பீர்கள்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். நிதியில் ஸ்திரத்தன்மை பெறுவீர்கள்.

ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. உறுதியான போக்கு காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 13.09.2025




புத்திசாலித்தனம் மற்றும் சமநிலை அணுகுமுறை வெற்றிக்கு வழிகாட்டும். இன்றைய நாளை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

பணியில் மிதமான முன்னேற்றம் காணப்படும். நேரப்படி பணிகளை செய்வதன் மூலம் திறமையாக பணியாற்ற முடியும்.

நீங்கள் உணர்ச்சி வசப்படுவீர்கள். அதனை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கும்.

நிதி வளர்ச்சி சுமாராக இருக்கும். பணத்தை கவன மாகச் செலவு செய்யவும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. அமைதியாக இருந்து பதட்டத்தை தவிர்ப்பதன் மூலம் ஆரோக்கி யத்தை பராமரிக்கலாம்.




உங்கள் விருப்பங்கள் இன்று நிறை வேறும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

சக பணியாளர்கள் உதவிகரமாகவும் ஆதரவாகவும் இருப்பார்கள். பணியைப் பொறுத்தவரை நீங்கள் திறம்பட பணி யாற்றி உங்கள் செயல்திறனை நிரூபிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர் கள். இதனால் உங்கள் துணையை நன்கு புரிந்து கொள்வீர்கள்.

பணம் அதிக அளவில் காணப்படும். சுப நிகழ்ச்சிக்காக பணத்தை பயன் படுத்தலாம்.

நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள். உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




நீங்கள் உற்சாகமாகவும் ஆற்றலுட னும் இருப்பது நல்லது.பலன்களை எதிர்பாராது செயால்பட்டால் வெற்றி கிடைக்கும்.

பணியிடச் சூழல் உங்களுக்கு உகந்ததாக இருக்காது. அதிகப் பணிகள் மற்றும் அசௌகரியங்கள் உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

நீங்கள் எந்த விஷயத்தையும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். சிறிய விஷயத்திற்கு வருத்தப் படுவது உறவை பாதிக்கும்.

உங்கள் வீட்டின் முன்னேற்றத்திற்காக பணம் செலவு செய்வீர்கள். இதனால் அதிக செலவு ஏற்படும். நெருங்கிய சொந்தங்களுக்காக பணம் செலவு செய்வீர்கள்.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது சிறந்தது.




பொதுவில் இன்றைய நாள் சிறப்பாக இருக்கும். உங்களுக்கு பயன் தரும் முடிவுகளை நீங்கள் இன்று எடுக்கலாம்.

நீங்கள் உங்கள் இலக்குகளை அமைத்து அதனை அடைவீர்கள். புதிய வாய்ப்புகள் உங்களுக்கு கிடைப்பதற்கான சாத்தியம் உள்ளது.

உங்கள் துணையுடன் அன்பாக மகிழ்ச்சியாக நடந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல் லுறவு வளரும்.

உங்கள் கையிலுள்ள பணம் உங்களுக்கு போது மானதாக இருக்கும். அதில் சிறிது பணத்தை பயனுள்ள விஷயங்களுக்கு செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் முழு ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.

# இரு மகாநாயக்க தேரர்களிடமும் எதிரணிப் பிரமுகர்கள் முறையீடு

## அரசாங்கத்தின் கைது நடவடிக்கைகளுக்கு எதிராக



ஐக்கிய நாடுகளின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் உடன்படிக்கையை (ICCPR) அரசாங்கம் துஷ்பிரயோ கம் செய்து வருவதாகவும், எதிர்க்கட்சி அரசியல்வாதிகளுக்கு எதிராக வழக்குத் தொடுத்து அவர்களை சிறையில் அடைக்க முயற்சிப்பதாகவும் சுட்டிக் காட்டி, தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ உள்ளிட்ட குழு, மல்வத்து, அஸ்கிரி உபய மகா விஹாரையின் இரண்டு மகாநாயக்க தேரர்களையும் இந்த விவகாரத்தில் தலையிடுமாறு கோரியுள்ளது.

முன்னாள் அமைச்சர்கள் அநுர பிரிய தர்ஷன யாப்பா, டிரான் அலஸ், நாடா ளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பி னர்கள் ஜனக வக்கும்புர, பிரேமநாத் சி. தொலவத்த, மொஹமட் முஸம்மில், நிமல் பியதிஸ்ஸ உள்ளிட்ட குழு நேற்று முன்தினம் மல்வத்து, அஸ்கிரி உபய மகா விஹாரைக்குச் சென்று இந்தக் கோரிக்கையை முன்வைத்தது.

முன்னாள் கடற்படைத் தளபதி நிஷாந்த உலுகேதென்னவை அநியாயக் குற்றச்சாட்டுகளின் பேரில் தொடர்ந்து தடுத்து வைத்து, நாட்டில் அமைதியை ஏற்படுத்த பெரும் முயற்சிகளை மேற் கொண்ட போர்வீரர்களுக்கு எதிராக அரசாங்கம் மேற்கொண்டு வரும் வேலைத்திட்டம் குறித்து மகாநாயக் கர்களுக்குத் தெரிவிக்க நடவடிக்கை எடுத்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முன்னாள் அமைச்சர்கள் குழு, ஐக்கிய நாடுகளின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் உடன்படிக்கையின் கீழ் முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பிலவை கைது செய்யும் திட்டம் இருப்பதாகவும் தேரர்க ளிடம் சுட்டிக்காட்டியுள்ளது.

முப்படைகள், புலனாய்வு அதிகாரி கள், அரசாங்கத்தை விமர்சிக்கும் எதிர்க் கட்சி அரசியல் தலைவர்கள், மகா சங்கத்தினர் மற்றும் இந்த நாட்டில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கி வழிநடத்தும் மகா நாயக்கர்கள் ஆகிய தரப்புகளின் தலைவர்களை அரசாங்கம் பழிவாங்குகிறது.

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பி னர்கள் கூட்டாக இரண்டு மகா விஹாரை களுக்கும் விஜயம் செய்வதன் நோக் கம், இந்த நாட்டில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கி வழிநடத்தும் மகா நாயக்க தேரர்கள் உட்பட மகா சங்கத் தினருக்கு பொருத்தமான உண்மை களை முன்வைப்பதும், அரசாங்கத் தலைவருக்கு தேரர்கள் ஆலோசனை வழங்குவதை உறுதி செய்வதுமாகும் என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.